NSW கல்வித் திணைக்களம்

# வீட்டில் முடிக்க வேண்டிய செயல்பாடுகள்

## பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்

பாடசாலையில் அவர்கள் கற்றுக்கொள்வதை வலுப்படுத்த, உங்கள் பிள்ளை வீட்டில் செய்துமுடிக்க விரும்பும் செயல்பாடுகளைப் பெறுவார்.

உங்கள் பிள்ளையின் செயல்பாடுகளை செய்துமுடிக்க ஊக்குவிக்கவும் மற்றும் அவர்களின் வேலையைப் பற்றி அவர்களிடம் பேசவும். இவ்வாறு உங்கள் பிள்ளைக்கு ஆதரவளிப்பதன் மூலம் அவர்கள் பாடசாலையில் என்ன கற்றுக்கொள்கிறார்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்வதோடு, கல்வி மற்றும் கற்றலை நீங்கள் மதிக்கிறீர்கள் என்பதையும் காட்டும்.

வீட்டில் செயல்பாடுகளை செய்துமுடிப்பதினால் உங்கள் பிள்ளைக்கு பின்வரும் வாய்ப்புகள் கிடைக்கப்பெறும்:

- பாடசாலையில் கற்றுக்கொண்ட விடயங்களை திருப்பிப்பார்த்தல்,
- அவர்களின் புரிதல் மற்றும் திறன்களை வலுப்படுத்துதல்,
- அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் பயன்படுத்தும் கற்றல் திறன்களை வளர்த்துக் கொள்ளுதல்.

### வீட்டில் நல்ல பழக்கவழக்கங்களை உருவாக்குதல்

நல்ல பழக்கங்களைக் கொண்டிருப்பது உங்கள் பிள்ளையின் பாடசாலை மற்றும் பணியிட வாழ்க்கை முழுவதும் உதவும்.

- செயல்பாடுகளை செய்துமுடிக்க வழக்கமான நேரத்தை அமைக்கவும் - இது ஒவ்வொரு நாளும் ஒரே நேரத்தில் இருக்க வேண்டும்.
- உங்கள் பிள்ளைக்குச் சிறப்பாகப் பொருந்தும் நேரத்தைத் தேர்ந்தெடுங்கள் (சில பிள்ளைகள் காலையில் சிறப்பாக கவனம் செலுத்துவார்கள், சிலர் மதியம் சிறப்பாக கவனம் செலுத்துவார்கள்).

உங்கள் பிள்ளைக்கு சௌகரியமான சூழல் இருக்கும் போது அவர்களுக்கு கவனம் செலுத்த இலகுவாக இருக்கும்.

- உங்கள் பிள்ளை படிக்க அமைதியான மற்றும் நன்கு வெளிச்சம் உள்ள இடத்தை ஒதுக்குங்கள்.
- அவர்களுக்கு தேவையான பென்சில்கள், காகிதம் அல்லது கணினி போன்றவற்றை அருகில் வைத்திருக்கவும்.
- கவனச்சிதறல்கள் இல்லாத இடத்தைக் கண்டறியவும் (எடுத்துக்காட்டாக, தொலைக்காட்சி அல்லது கணினி விளையாட்டுகளிலிருந்து தூரமான இடங்கள்).

### என் பிள்ளைக்கு நான் எப்படி உதவ முடியும்?

- ஆர்வமாக இருங்கள் மற்றும் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பற்றி கேள்விகள் கேளுங்கள்.
- அவர்கள் கற்றுக்கொள்வதை உங்களுக்குக் கற்பிக்கச் சொல்லுங்கள்.
- அவர்களுக்கு உதவி தேவையா என்று பரிசோதிக்கவும்
- அவர்கள் முயற்சி செய்து ஒரு வேலையை முடிக்கும்போது அவர்களின் முயற்சிகளைப் பாராட்டுங்கள்.
- பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு ஆதரவுதவியாக இருக்கக்கூடிய வளங்கள் ஏதேனும் இருந்தால் அதற்கான அணுகலை ஆசிரியரிடம் கேளுங்கள்.

நினைவில் வைத்து கொள்ளுங்கள், வீட்டில் செயல்பாடுகளை முடிப்பது உங்கள் பிள்ளைக்கு ஒரு நேர்மறையான அனுபவமாக இருக்க வேண்டும்.

செயல்பாடுகளை செய்துமுடிக்க உங்கள் பிள்ளைக்கு கூடுதல் உதவி அல்லது குறிப்பிட்ட சீரமைவுகள் தேவையாயின் அது பற்றி ஆசிரியருக்குத் தெரியப்படுத்தவும்.

### தொலைபேசி உரைப்பெயர்ப்பாளர் சேவை

பாடசாலையைத் தொடர்புகொள்ள உங்களுக்கு உரைப்பெயர்ப்பாளர் உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து 131 450 என்ற எண்ணிற்கு அழைக்கவும், உங்களுக்கு என்ன மொழி தேவை என்பதை தொலைபேசி இயக்குனரிடம் கூறி, பாடசாலையை அழைக்கச் சொல்லவும். உங்கள் உரையாடலில் உங்களுக்கு உதவ, தொலைபேசி இயக்குனர் ஒரு உரைப்பெயர்ப்பாளரை அழைப்பில் இணைப்பார். இந்த சேவைக்காக உங்களிடம் கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது.